1971 டிசம்பர் 18]

*552 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை மாநகராட்சி மன்ற மேயர் பதவிக்காலத்தை ஓராண்டிலிருந்து மூன்றாண்டாக நீடிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

நகராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள்

*553 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நகராட்சிகளுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் தந்திட அரசு முடிவெடுத்துள்ளதா ?

மாண்புகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

*554 வினா—திரு. பி. எஸ். மணியன்

திரு. ந. சோமசுந்தரம்

மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, எவ்வளவு காலத்திற்குள் அப்படிப்பட்ட உத்தரவை அரசு வழங்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதுதான் நகராட்சியில் பணியாற்றும் பணியாளர்களைப் பொறுத்து அரசு ஊழியர்களாக ஆக்க நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சிற்றூர் வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்து வருகிறார்கள். பரிசீலனை செய்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்த பிறகு, அரசு ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடியவர்களுக்குப் பதவி உயர்வுக்கான எந்த வாய்ப்பும் இல்லை. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்களுக்கு